**ஈசாக்கு : கிறிஸ்துவின் நிழல்.**

ISAAC: A SHADOW OF CHRIST

Thursday Bible Study
ACA Avadi Church
18 April 2024

**சங்கீதம் 119:18 -**

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.

**வேதத்தை நாம் ஒரு ஒருங்கிணைந்த கதையாக படிக்க வேண்டும்:**

- சிருஷ்டிப்பு: **காரியங்கள் எப்படி இருந்தது** என்பதை விளக்குகிறது.
- விழுகை: **காரியங்கள் எப்படி இருக்கின்றன** என்பதை விளக்குகிறது
- மீட்பு: **காரியங்கள் எப்படி இருக்க முடியும்** என்பதைக் காண்பிக்கிறது.
- மறுசீரமைப்பு: **காரியங்கள் எப்படி இருக்கும்** என்பதைக் காண்பிக்கிறது

**நாம் ஏன் பழைய ஏற்பாட்டை நிராகரிக்கக் கூடாது?**

**பழைய ஏற்பாட்டில் இயேசு மறைந்திருக்கிறார், புதிய ஏற்பாட்டில் இயேசு வெளியரங்கமாய் இருக்கிறார்.**

- தேவன் தனது மீட்பின் திட்டத்தை பழைய ஏற்பாட்டில் முன்னமே ஏற்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தின் மூலம் நமக்கு கற்பித்தார்.
- வருகிற காரியங்களுக்கு நிழலாட்டமாக தேவன் பழைய ஏற்பாட்டில் மனிதர்கள், சம்பவங்கள், ஏற்படுத்தப்பட்ட சம்பிரதாயங்கள், (கட்டமைப்பு) வாயிலாக தேவன் தமது மீட்பின் திட்டத்தை நமக்கு கற்பித்தார்.
- இயேசுவுடனான தனது முதல் சந்திப்புக்குப் பிறகு, பிலிப்பு நாத்தான்வேலுக்கு அறிவித்தார்:

**யோவான் 1:45**

45. பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு: **நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்;** அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்

**எம்மாவூர் சீடர்களுக்கு,**

**லூக்கா 24: 27**

27. **மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்**.

**லூக்கா 24:44**

44. (இயேசு)அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார்.

**யோவான் 5:39**

39. வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே.

**எபிரெயர் 10:7**

7. அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளிலல் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்.

- முன்னடையாளவியல் என்பது ஒரு சிறப்பு வகை குறியீட்டுயியல் (சின்னம்)
- எதிர்காலத்தில் நிகழப்போகிற காரியங்களையே இந்த எல்லாம் முன் அடையாளங்களும் குறிப்பதால் இந்த முன் அடையாளங்களை "தீர்க்கதரிசன சின்னங்கள்" என்று வரையறுக்கலாம்.
- மேலும் குறிப்பாக வேதத்தில் பழைய ஏற்பாட்டில் முன் அடையாளமாக குறிக்கப்படும் ஒரு நபரோ அல்லது ஒரு காரியமோ அவை புதிய ஏற்பாட்டில் உள்ள ஒரு நபரையோ அல்லது ஒரு காரியத்தையோ முன் அறிவிக்கும் வண்ணமாக இருக்கிறது.

**எபிரெயர் 10: 1-5**

**இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால்**, வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது.

**ஈசாக்குக்கும் இயேசு கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள 40 ஒற்றுமைகள்:**

ஈசாக்கு அநேக அம்சங்களில் கிறிஸ்துவை முன்மாதிரியாகக் காட்டுகிறார்:

**1.இந்த இரண்டு குமாரர்களும் ஆபிரகாமின் சந்ததியார்கள்.**

**மத்தேயு 1:1-2**

1. ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு:
2. **ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்**; ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான்; யாக்கோபு யூதாவையும் அவன் சகோதரரையும் பெற்றான்;

**2. இருவருடைய கருத்தரிப்பு மற்றும் பிறப்பு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவை / தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டவை.**

**ஆதியாகமம் 17:16**

16. நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்; அவள் ஜாதிகளுக்குத் தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன் என்றார்.

**ஏசாயா 7:14**
14. ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.

• ஈசாக்கு மற்றும் இயேசு இருவருமே வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள் என்று அழைக்கப்பட்டார்கள்.

**கலாத்தியர் 4:23**
23. அடிமையானவளிடத்தில் பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்தான், சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன் வாக்குத்தத்தத்தின்படி பிறந்தான்.

**அப்போஸ்தலர் 13:32-33**
32. நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன் என்று இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே, 33. இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோம்.

**3. இவர்கள் இருவரும் அநேக ஆண்டுகளின் காத்திருப்புக்கு பிற்பாடு தேவன் குறித்திருந்த (நியமித்திருந்த) காலத்தில் பிறந்தார்கள்.**

- ஆபிரகாமும் சாராவும் 25 வருடங்கள் காத்திருந்தனர்
- இயேசு வந்தபோது இஸ்ரவேலர் தங்கள் மேசியாவுக்காக ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் காத்திருந்தனர்.

**4. இருவருடைய பிறப்பையும் தேவதூதர்கள் முன் அறிவித்தார்கள்.**

• ஈசாக்கின் பிறப்பைப் பற்றிய நற்செய்தியை தேவதூதர்கள் கொண்டு வந்தனர்
• ஒரு தேவதூதன் மரியாளிடத்திலும் யோசேப்பினிடத்திலும் உரைத்தான், மேலும் மேய்ப்பர்கள் இடத்திலும் தேவதூதர்கள் அதை (பிறப்பை) அறிவித்தார்கள்.

**5. அவர்கள் இருவருடைய பிறப்புக்கும் ஒரு தெய்வீக திட்டம் (நியமனம்) இருந்தது.**

ஈசாக்கு - மேசியாவின் வித்தை சுமக்க

**ஆதியாகமம் 22:18**
18. நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று **கர்த்தர்** சொல்லுகிறார் என்றார்.

கிறிஸ்து - தேசங்களை ஆசீர்வதிக்க அனுப்பப்பட்டார்.

**அப்போஸ்தலர் 3:26**
26. அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார் என்றான்.

### 6. இருவருமே அதிசயமாய் பிறந்தவர்கள்.

- ஈசாக்கு வயது முதிர்ந்த தம்பதிகளுக்கு பிறந்தார். (ஆபிரகாமுக்கு நூறு வயது சாராவுக்கு 90 வயது) (ஆதியாகமம் :17:17. 18:10-15,21:1-2.}
- கிறிஸ்து ஒரு கன்னிகையின் மூலம் அதிசயமாய் பிறந்தார். (லூக்கா 1:30-35)

### 7. இருவருடைய பிறப்பும் மிகுந்த சந்தோஷத்தை தந்தது.

**ஆதியாகமம் 21:5,6**

5அவருடைய மகன் ஈசாக்கு அவருக்குப் பிறந்த பொழுது அவருடைய வயதோ நூறு.
6அப்பொழுது சாரா, "கடவுள் என்னைச் சிரிக்க வைத்தார் என்றும் இதைக் கேட்கும் அனைவரும் என்னோடு சேர்ந்து சிரிப்பர்" என்றும் சொன்னார்.

**லூக்கா 2:10,11**

10. தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். 11. இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.

### 8. இருவரும் தங்கள் தகப்பனுக்கு ஒரேபேரான குமாரர்களாய் இருந்தார்கள்.

ஈசாக்கு ஆபிரகாமின் ஒரேபேரான குமாரன்

ஆதியாகமம் 22:1- 13 – யில் ஈசாக்கை 8 முறை குமாரன் என்றும் , 2 முறை ஒரே ஒரேபேரான குமாரன் என்றும் வலியுறுத்தி சொல்லப்படுகிறது.
(அழைக்கப்படுகிறார்) (இஸ்மவேலை - ஆபிரகாம் மற்றும் ஆகார் ஏற்கனவே பெற்றிருந்தாலும் கூட)

- மேலும் இயேசு தேவனுடைய ஒரேபேரான குமாரன்.

**யோவான் 1:14.**

14. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

இயேசு "பிதாவினுடைய ஒரேபேரானவர்". (யோவான்:1:14,18)

### 9. இருவரும் தகப்பனால் மிகவும் நேசிக்கப்பட்டார்கள்.

**ஆதியாகமம் 22:2**

2. அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்.

**மத்தேயு 3:16,17.**

16. இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக்

கண்டார். 17. அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

**10. இருவரும் பிறப்பதற்கு முன்னதாகவே பேரிடப்பட்டார்கள்.**

**ஆதியாகமம் 17:19**

19. அப்பொழுது தேவன்: உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக; என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்.

**மத்தேயு 1:21**

21. (மரியாள் )அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக;

**11. இருவரும் அவர்களுடைய பிறப்பிற்குப் பின் எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்யப்பட்டார்கள்.**

**ஆதியாகமம் 21:4**

4. தன் குமாரனாகிய ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளிலே, ஆபிரகாம் தனக்குத் தேவன் கட்டளையிட்டிருந்தபடி அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினான்.

**12. இருவருமே நீதிமான்களாய் இருந்தார்கள்.**

**ஆதியாகமம் 18:19**

19. **கர்த்தர்** ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, **கர்த்தருடைய** வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்.

**எரேமியா 23:5-6**

5. இதோ, நாட்கள் வருமென்று **கர்த்தர்** சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார். 6. அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம்பண்ணும்; அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற **கர்த்தர்** என்பதே.

**13.இருவருக்கும் உடன்படிக்கை என்பது குமாரன் மூலம் வெளிப்பட்டதே தவிர வேலைக்காரன் மூலம் அல்ல.**

**ஆதியாகமம் 15:2 , 4**

2. அதற்கு ஆபிராம்: **கர்த்தராகிய** ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே; தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருக்கிறானே என்றான்.

4. அப்பொழுது **கர்த்தருடைய** வார்த்தை அவனுக்கு உண்டாகி: இவன் உனக்குச் சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான் என்று சொல்லி,

**யோவான் 1:19-20, 26,27**
19. எருசலேமிலிருந்து யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்பி: நீர்
யார் என்று கேட்டபொழுது, 20. அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி, நான் கிறிஸ்து
அல்ல என்றும் அறிக்கையிட்டான். 26. யோவான் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நான்
ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே
நிற்கிறார்.
27. அவர் எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர்; அவருடைய பாதரட்சையின் வாரை
அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றான்.

**14. இருவருமே மனிதர்களால் பொறாமை கொள்ளப்பட்டார்கள்.**

**ஆதியாகமம் 26:12-14**
12. ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; **கர்த்தர்** அவனை ஆசீர்வதித்ததினால் அந்த
வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்;
13. அவன் ஐசுவரியவானாகி, வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான். 14. அவனுக்கு
ஆட்டுமந்தையும், மாட்டுமந்தையும், அநேக பணிவிடைக்காரரும் இருந்தபடியினாலே பெலிஸ்தர்
அவன் பேரில் பொறாமைகொண்டு,

**யோவான் 12:19**
19. அப்பொழுது பரிசேயர் ஒருவரையொருவர் நோக்கி: நீங்கள் செய்கிறதெல்லாம் வீணென்று
அறிகிறதில்லையா? இதோ, உலகமே அவனுக்குப் பின்சென்று போயிற்றே என்றார்கள்.

**15. இருவரும் தங்கள் சகோதரர்களால் பரியாசம் பண்ணப்பட்டார்கள்.**

**ஆதியாகமம் 21:9**
9. பின்பு எகிப்து தேசத்தாளாகிய ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரன்
பரியாசம்பண்ணுகிறதைச் சாராள் கண்டு,

**மாற்கு 15:29-32**
29. அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலையைத் துலுக்கி: ஆ! ஆ! தேவாலயத்தை
இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, 30. உன்னை நீயே இரட்சித்துக்கொள்;
சிலுவையிலிருந்திறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள். 31. அப்படியே பிரதான ஆசாரியரும்
வேதபாரகரும் தங்களுக்குள்ளே பரியாசம்பண்ணி: மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான்
இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை. 32. நாம் கண்டு விசுவாசிக்கத்தக்கதாக இஸ்ரவேலுக்கு
ராஜாவாகிய கிறிஸ்து இப்பொழுது சிலுவையிலிருந்திறங்கட்டும் என்று
சொல்லிக்கொண்டார்கள். அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டவர்களும் அவரை
நிந்தித்தார்கள்.

**16. இருவருமே மனிதர்களால் (ஜனங்களால்) துரத்தி விடப்பட்டார்கள்.**

**ஆதியாகமம் 26:16**
16. அபிமெலேக்கு ஈசாக்கை நோக்கி: நீ எங்களை விட்டுப் போய்விடு; எங்களைப் பார்க்கிலும்
மிகவும் பலத்தவனானாய் என்றான்.

**லூக்கா4:28-30**

28. ஜெபஆலயத்திலிருந்த எல்லாரும், இவைகளைக் கேட்டபொழுது, கோபமூண்டு, 29. எழுந்திருந்து, அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி, தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டுபோனார்கள். 30. அவரோ அவர்கள் நடுவினின்று கடந்துபோய்விட்டார்.

**17. அவர்கள் இருவருமே ஜனங்களிடத்தில் ஒருபோதும் சண்டையிட வில்லை /வாக்குவாதம் பண்ணவும் இல்லை.**

**ஆதியாகமம் 26:19-22**

19. ஈசாக்குடைய வேலைக்காரர் பள்ளத்தாக்கிலே வெட்டி, அங்கே சுரக்கும் நீரூற்றைக் கண்டார்கள்.20. கேராரூர் மேய்ப்பர் இந்தத் தண்ணீர் தங்களுடையது என்று சொல்லி, ஈசாக்குடைய மேய்ப்பருடனே வாக்குவாதம்பண்ணினார்கள்; அவர்கள் தன்னோடே வாக்குவாதம்பண்ணினபடியால், அந்தத் துரவுக்கு ஏசேக்கு என்று பேரிட்டான். 21. வேறொரு துரவை வெட்டினார்கள்; அதைக்குறித்தும் வாக்குவாதம்பண்ணினார்கள்; ஆகையால் அதற்கு சித்னா என்று பேரிட்டான். 22. பின்பு அவ்விடம்விட்டுப் பெயர்ந்துபோய், வேறொரு துரவை வெட்டினான்; அதைக்குறித்து அவர்கள் வாக்குவாதம்பண்ணவில்லை; அப்பொழுது அவன்: நாம் தேசத்தில் பலுகும்படிக்கு, இப்பொழுது **கர்த்தர்** நமக்கு இடம் உண்டாக்கினார் என்று சொல்லி, அதற்கு ரெகொபோத் என்று பேரிட்டான்.

**மத்தேயு 12:18-19**

18. இதோ, நான் தெரிந்துகொண்ட என்னுடைய தாசன், என் ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற என்னுடைய நேசன்; என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணுவேன், அவர் புறஜாதியாருக்கு நியாயத்தை அறிவிப்பார். 19. வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்குரலிடவுமாட்டார்; அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை.

**I பேதுரு 2:21-23**

21. இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். 22. அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; 23. அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.

**18. இருவரும் தங்கள் தகப்பனுடைய வீட்டை விட்டுப் போனார்கள்.**

ஈசாக்கு - பெயர்செபாவை விட்டுப் போனார்.
இயேசு - பரலோகத்தை விட்டு வந்தார்.

**யோவான்6:38**

38. என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்.

**19. அவர்கள் இருவரும் தியானிப்பதற்கும் /ஜெபிப்பதற்கும் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளியே சென்றார்கள்.**

**ஆதியாகமம் 24:63**

63. ஈசாக்கு சாயங்காலவேளையிலே தியானம்பண்ண வெளியிலே போயிருந்து, தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, ஒட்டகங்கள் வரக்கண்டான்.

**லூக்கா 5 : 16**

16 - அவரோ வனாந்தரத்தில் தனித்துப் போய், ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்.

**20. அவர்கள் இருவரும் மரணத்தை சந்திப்பதற்கு முன்னதாக போஜனத்தை (ஆகாரத்தை) ஆயத்தம் பண்ணும்படி கேட்டுக் கொண்டார்கள்.**

**ஆதியாகமம் 27:7**

7. நான் புசித்து, எனக்கு மரணம் வருமுன்னே, கர்த்தரை முன்னிட்டு உன்னை ஆசீர்வதிக்கும்படி, நீ எனக்காக வேட்டையாடி, அதை எனக்கு ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்துக்கொண்டுவா என்று சொல்லக்கேட்டேன்.

**லூக்கா 22:7,8**

7. பஸ்காவைப் பலியிடவேண்டிய புளிப்பில்லாத அப்பப் பண்டிகை நாள் வந்தது. 8. அப்பொழுது அவர் பேதுருவையும் யோவானையும் அழைத்து: நாம் பஸ்காவைப் புசிக்கும்படிக்கு நீங்கள் போய், அதை நமக்கு ஆயத்தம் பண்ணுங்கள் என்றார்.

**21. இருவரும் பலியிட படுவதற்கு மலையின் மேல் ஏறினார்கள்.**

ஆபிரகாம் மோரியா தேசத்தில் உள்ள மலைக்கு பிரயாணபட்டார்.( ஆதியாகமம் 22:2-4)
இயேசு கொல்கொதா மலையில் ஏறினார்.( **மத்தேயு 26:30)**

**22. இருவருமே மலையின் அடிவாரம் வரை ஒரு கழுதையுடன் சென்றனர்.**

மலையின் அடிவாரம் வரை ஆபிரகாம் ஒரு கழுதையை கூட்டி சென்றார்.

**ஆதியாகமம் 22:3**

3. ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின்மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்துகொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப்போனான்..

இயேசு ஒரு கழுதையின் மேல் அமர்ந்து எருசலேமுக்கு வந்தார்.

**மத்தேயு 21:4-5**

4. இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள் என்று,
5. தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது.

### 23. இருவருமே அவர்கள் பலிக்கான கட்டைகளை சுமந்து சென்றனர்.

**ஆதியாகமம் 22:6**

6. ஆபிரகாம் தகனபலிக்குக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனாகிய ஈசாக்கின்மேல் வைத்து, தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக்கொண்டான்; இருவரும் கூடிப்போனார்கள்.

**யோவான் 19:17**

17. அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்.

- இந்த இரண்டு கூற்றுக்களிலும் (காரியங்களிலும்) ஈசாக்கு மற்றும் இயேசுவை பலியிடுவதற்காக மரக்கட்டைகளே உடற் கருவியாக பயன்படுத்தப்பட்டன.

**ஏன் மரக்கட்டைகள்?**

- ஏனென்றால் மரத்தில் தான் எல்லா காரியங்களும் ஆரம்பமாயின - நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் மரம்.

### 24. இருவருக்கும் பலிக்கான மரக்கட்டைகளை வேறு ஒரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கு உதவி ஆட்கள் இருந்தனர்.

ஈசாக்கு - அவனுடைய வேலைக்காரர் உதவி செய்தனர். (ஆதியாகமம் 22:3)
இயேசு - சீரேனே ஊரானாகிய சீமோன் இயேசுவுக்கு உதவி செய்தார். (மத்தேயு 27:32)

### 25. ஈசாக்கின் தகனபலிக்காக கட்டைகள் பிளக்கப்பட்டது.
### இயேசுவை சிலுவையில் அறைவதற்காக சிலுவை மரம் இரண்டு துண்டுகளாக பிளக்கப்பட்டது.

**ஆதியாகமம் 22:3**

3. ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின்மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்துகொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப்போனான்..

### 26. ஈசாக்கு பலிபீடத்தின்மேல் உள்ள கட்டைகளின்மீது கிடத்தப்பட்டான்
### இயேசு சிலுவையின் மீது கிடத்தப்பட்டார்.

**ஆதியாகமம் 22:9**

9. தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த இடத்துக்கு வந்தார்கள்; அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தினான்.

### 27. இந்த இரண்டு சம்பவங்களிலும் குமாரர்கள் வேலைக்காரர்களாக மாறினார்கள்.

**ஆதியாகமம் 22:6**

ஆபிரகாம் தகனபலிக்குக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனாகிய ஈசாக்கின்மேல் வைத்து, தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக்கொண்டான்; இருவரும் கூடிப்போனார்கள்.

**யோவான் 13:12-16**

12. அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? 13. நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். 14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். 15. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். 16. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல.

**28. இருவரும் தங்களை தாங்களாகவே தேவனுக்கு தகனபலியாக கொடுத்தார்கள்**

**ஆதியாகமம் 22:2**

2. அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்.

**எபேசியர் 5:2**

2. கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்.

**29. இருவரும் தங்கள் தகப்பனிடத்தில் கேள்வி கேட்டார்கள்.**

- ஈசாக்கு ஆபிரகாமை நோக்கி “இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான்” (ஆதியாகமம் 22:7)
- இயேசு: ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம். **(மத்தேயு 27:46)**

**30. இருவரும் தங்களை தங்கள் தகப்பனுக்கு ஒப்புக் கொடுத்தார்கள்.**

**ஆதியாகமம் 22:9**

9. தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த இடத்துக்கு வந்தார்கள்; அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தினான்.

**மத்தேயு 26:39**

39. சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படிசெய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.

**பிலிப்பியர் 2:8**

8. அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.

**31. இருவரும் மூன்று நாள் மரித்தவர்கள் ஆக கருதப்பட்டார்கள்.**

- ஈசாக்கு - பிரயாணத்தின் வழியிலே ஈசாக்கு மரித்து விட்டதாக ஆபிரகாம் எண்ணினான்.

**எபிரெயர் 11:17-19**

17. மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது, ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான் 18. ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே; இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன், மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி, 19. தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்.

- இயேசு - மூன்று நாள் மரித்தவராக இருந்தார்.( லூக்கா 24:46)

**32. இருவருமே தாங்கள் கொல்லப்படுவதற்கு ஆயுதங்களை எதிர்கொண்டார்கள்.**

**ஆதியாகமம் 22:10**

10. பின்பு ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான்.

**யோவான் 19:34**

34. ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது.

**33. இருவரும் பலி செலுத்தப்படும் போது கட்டப்பட்டவர்களாய் இருந்தார்கள்.**

- ஆபிரகாம், ஈசாக்கை கட்டி பலிபீடத்தில் கிடத்தினான்.( **ஆதியாகமம் 22:9)**
- தேசாதிபதியாகிய பொந்திய பிலாத்துவினிடத்தில் ஒப்புக் கொடுப்பதற்கு முன்பாக இயேசு கட்டப்பட்டு இருந்தார்.( **மத்தேயு 27:1-2)**

**மத்தேயு 27:1-2**

1.விடியற்காலமானபோது, சகல பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும், இயேசுவைக் கொலைசெய்யும்படி, அவருக்கு விரோதமாக ஆலோசனைபண்ணி, 2. அவரைக் கட்டி, கொண்டுபோய், தேசாதிபதியாகிய பொந்திய பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்.

**34. இருவருமே அவர்களுடைய தியாகமான மரணத்திற்கு பாத்திரவான்கள் (தகுதியுடையவர்கள்) அல்ல.**

**ஆதியாகமம் 22:2**

2. அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்.

**லூக்கா 23:39-41**

39. அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்.40. மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? 41. நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு,

**35. இருவருமே தங்கள் ஜீவனை ஒப்புக்கொடுக்கும் போது வாய் திறவாது இருந்தார்கள்.**

**ஏசாயா 53:7**

7. அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.

**36. இருவரும் மாற்று பலியை எதிர்கொண்டார்கள்.**

நம் அனைவருக்கும் ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவே மாற்றுபலி ஆனார் ( **ஆதியாகமம்** 22: 7-8,13)

**ஆதியாகமம் 22:13**

13. ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான்; அப்பொழுது ஆபிரகாம் போய், கடாவைப்பிடித்து, அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான்.

நம் அனைவருக்கும் ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவே மாற்றுபலி ஆனார்.

**ஏசாயா 53: 4-6**

4. மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.

5. நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். 6. நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; **கர்த்தரோ** நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.

**37. இரண்டு பலிகளின் தலையின் மீதும் முட்கள் இருந்தது.**

ஆபிரகாம் ஆட்டுக்கடாவை கண்டபோது , அநேக ஆண்டுகளுக்கு பிற்பாடு இயேசுவின் தலையில் முட் கிரீடம் சூட்டப்பட்டது போலவே முட்புதரில் ஆட்டுக் கடாவின் கொம்பு (தலை) சிக்கிக் கொண்டிருப்பதை கண்டார்.

**ஆதியாகமம் 22:13**
13. ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான்; அப்பொழுது ஆபிரகாம் போய், கடாவைப்பிடித்து, அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான்.

**யோவான் 19:2**
2. போர்ச்சேவகர் **முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து,** சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி:

**38. இருவருமே தங்களது மரணத்தைக் காண முடியாத இரண்டு மனிதர்களோடு கூட சென்றனர்.**

**ஆதியாகமம் 22:3,5**
3. ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின்மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்துகொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப்போனான்.

**மத்தேயு 27:38**
38. அப்பொழுது, அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டார்கள்.

- அந்த இரண்டு மனிதர்களும், ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் இடையே என்ன நடந்தது என்பதை குறித்து சாட்சி பகர முடியவில்லை.
- அவ்வண்ணமே இயேசு பலியிடப்பட்ட பொழுது , பிதாவாகிய தேவனுக்கும் குமாரனாகிய கடவுளுக்கும் இடையே என்ன நடந்தது என்பதை ஒருவராலும் சரியாக காண முடியவில்லை.
- நமது பாவங்கள் சிலுவையில் இருந்த கிறிஸ்துவின் மீது வைக்கப்பட்ட போது இருளானது அந்த தெய்வீக பரிமாற்றத்தை மூடிற்று. (மறைத்தது)

**ஆதியாகமம் 22:5.**
அப்பொழுது ஆபிரகாம் தன் வேலைக்காரரை நோக்கி: நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள், நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய், தொழுதுகொண்டு, உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம் என்றான்.

**மத்தேயு 27:45**
45. ஆறாம் மணி நேரமுதல் ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று.

**39. இருவருமே அவர்களுடைய கீழ்படிதலுக்கு பிற்பாடு " மணவாட்டி" அவர்களுக்கு வெகுமதியாக (பரிசாக) கொடுக்கப்பட்டது.**

**ஆதியாகமம் 24:67**

67. அப்பொழுது ஈசாக்கு ரெபெக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டு, அவளை நேசித்தான். ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதலடைந்தான்.

**40. அவர்களுடைய பலிகளின் பிற்பாடு அவர்களுடைய மணவாட்டியின் பிறப்பு அறிவிக்கப்பட்டது**

**ஆதியாகமம் 22:20-22**

20. இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, ஒருவன் ஆபிரகாமிடத்தில் வந்து: மில்க்காளும் உன்
சகோதரனாகிய நாகோருக்குப் பிள்ளைகளைப் பெற்றாள்; 21. அவர்கள் யாரென்றால்,
முதற்பேறான ஊத்ஸ், அவன் தம்பியாகிய பூஸ், ஆராமுக்குத் தகப்பனாகிய கேமுவேல், 22.
கேசேத், ஆசோ, பில்தாஸ், இத்லாப், பெத்துவேல் என்பவர்கள்; பெத்துவேல் ரெபெக்காளைப்
பெற்றான் என்று அறிவித்தான்.

**அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:47**

47. தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்.

**அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:28**

28. ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்.